DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.99/2018**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.03.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தேவகோட்டையில் மோகனா குழந்தைகள் மருத்துவமனை நடத்தி வருகிறேன். கடந்த 24.05.2018 ம் தேதி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது மதியம் 2.45 மணிக்கு கார்த்திக் என்பவர் அவசர சிகிச்சை பிரிவிக்கு வந்தவரை விசாரித்ததில் அவரது வீட்டில் 24.05.2018 ம் தேதி மதியம் 2 மணிக்கு அடையாளம் தெரிந்த 6 நபர்கள் (1 ஆண், 5 பெண்கள்) செங்கல் மற்றும் கம்பியால் தாக்கியதாக கூறினார். அவரை உள்நோயளியாக அனுமதித்து பரிசோதித்து பார்த்ததில் அவருக்கு தலையின் நடுப்பகுதியில் வீக்க காயமும், வலியும் இருந்தது. அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணை காயம்

என்று சான்று வழங்கினேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. அன்றை தினமே 3 மணிக்கு சிகிச்சைக்கு வந்த ராஜாமணி என்ற பெண் நபரை விசாரித்ததில் அவர் தன்னை 24.05.2018 ம் தேதி 2 மணியளவில் புளியாலில் உள்ள தன்னுடைய வீட்டில் வைத்து அடையாம் தெரிந்து 6 நபர்கள் (1 ஆண், 5 பெண்கள்) செங்கல் மற்றும் கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை உள்நோயளியாக அனுமதித்து அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது முழங்காலில் சிராய்ப்பு காயமும், இடது முன்கையில் சிராய்ப்பு காயமும் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். ஆனால் அவர் சிகிச்சை பெறாமல் சென்றுவிட்டார். அதனால் அவருக்கு காயச்சான்று தர இயலாது என்று சான்றழித்தேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று தர இயலாது என்ற சான்றிதழ் அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ஒரு நபர் இரு சக்கர வாகனத்தில் கீழே தடுமாறி விழுந்தால் பம்பரில் அடிபட்டு 1ம் நபருக்கு ஏற்பட்டது போல் வீக்க காயம் வருவதற்கு வாய்ப்புண்டு என்றால் சரிதான். அதே வண்டியில் பின்னால் ஒருவர் அமர்ந்து சென்றால் 1வது நபருக்கு ஏற்பட்டது போல் சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**மறு விசாரணை:இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.